**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி**
திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 25ம் நாள்
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை
*******

**அசல் வழக்கு எண். 190/2022**
**CNR.No.TNMY07-000273-2022**

விஜயகுமார் ...வாதி

...எதிர்...

விஜயலெட்சுமி ...பிரதிவாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 04.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு S.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. E. செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா தொகை ரூ.40,140/–ம், அசல் தொகை ரூ.30,000/–க்கு பின்வட்டியுடன் வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து கிடைக்கும்படி உத்தரவிடக்கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வாதி வழக்குரையின் சுருக்கம்**

**(1.1)** வாதியிடம், பிரதிவாதி கடந்த 08.08.2019 அன்று கடனாக ரூ.30,000/– பெற்றுக்கொண்டு, அதற்காக பிரதிவாதி 08.08.2019 அன்றே, ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி வழக்கு பிராமிசரி நோட்டில் கடன்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:06:35 +0530

தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100-00-க்கு ரூ.1-00 வீதம் வட்டிச் சேர்த்து கூடுதலாகும் அசல், வட்டித்தொகையை வாதிக்காவது, அவரின் உத்தரவு பெற்றவர்களுக்காவது வாதி வேண்டும்போது பிரதிவாதி கொடுப்பதாக கண்டுள்ளது.

**(1.2)** வழக்கு பிராமிசரி நோட்டுக்காக கடந்த 30.09.2021 வரையிலும் எவ்வித தொகையும் வாதிக்கு பிரதிவாதி கொடுக்கவில்லை. எனவே, வழக்கு பிராமிசரி நோட்டின் அசல், வட்டித் தொகையை கொடுக்க அறிவுறுத்தி வாதி வழக்கறிஞர் மூலம் 30.09.2021 அன்று பிரதிவாதிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார். அதை 05.10.2021ல் பெற்றுக் கொண்ட பிரதிவாதி, 08.10.2021 அன்று வாதியிடம், வழக்கு பிராமிசரி நோட்டின் அசல் வட்டித்தொகைக்காக ரூ.1000/- கொடுத்து பிராமிசரி நோட்டில் வரவு வைத்து கையெழுத்து செய்துள்ளார்.

**(1.3)** அதன்பிறகு பாக்கி அசல், வட்டித்தொகை வாதிக்கு வரவில்லை என்றும், பிரதிவாதிக்கு ரூ.10,00,000/-க்கு குறையாமல் அசையும், அசையா சொத்துக்கள் உள்ளதாகவும், எனவே வழக்கு பிராமிசரி நோட்டின் பாக்கி அசல், வட்டி கிடைக்க வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு வாதி கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்று வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>**

**(2.1)** வாதி பிராதுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் உண்மை தன்மையை வாதியே நிரூபிக்க வேண்டுமென்றும், தாவா வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வாதி கூறியபடி கடந்த 8.08.2019 அன்று ரூ.30000 (முப்பதாயிரம்) தொகை கடனாக பெற்றுக் கொண்டு, அதற்காக தாவா பிராமிஸரி நோட்டை பிரதிவாதி எழுதிக் கொடுக்கவில்லை என்றும்,

**(2.2)** இந்த பிரதிவாதி வாதியிடம் 08.08.2019 அன்றோ, அதற்கு முன்போ பின்போ எவ்வித தொகையும் கடனாக வாங்கவில்லை, எவ்வித பிராமிஸரி



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:06:40 +0530

நோட்டும் எழுதி கொடுக்கவில்லை என்றும், வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு இந்த பிரதிவாதி, வாதியை தொடர்பு கொண்டு கேட்டபோது, வாதி தவறுதலாக அறிவிப்பு கொடுத்ததாகவும், அதனை வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும் கூறியதன் அடிப்படையில் பிரதிவாதி வாதிக்கு எவ்வித பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை என்றும்,

**(2.3)** தாவாவில் சொல்லப்பட்ட வியாஜ்ஜிய மூலம் கற்பனையானது என்றும், எனவே தாவா வழக்கை இந்த பிரதிவாதியின் அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டுள்ளன.**

1. 08.08.2019 தேதியிட்ட தாவா கடனுறுதி சீட்டு உண்மையானது மற்றும் செல்லத்தக்கதா?
2. வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?
3. தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன ?

**4.** வாதி தரப்பில் வாதியான திரு. விஜயகுமார் என்பவர் **வா.சா.1** ஆக சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில் **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.3** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்டும், சாட்சிகள் யாரும் முன்னிலைப்படுத்தப்படவில்லை, சான்றாவணங்களும் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** வாதி தரப்பில் இவ்வழக்கினை அனுசரித்து வாதியான திரு. விஜயகுமார் **வா.சா.1** ஆக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அவர் மூலமாக 08.08.2019ம் தேதியில் வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 30.09.2021ம் தேதியில் வாதியின் வழக்கறிஞர்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:06:45 +0530

பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், மேற்படி அறிவிப்பை 05.10.2021ல் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் **வா.சா.ஆ.3** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. வாதி தரப்பு வாதம்

**(6.1) வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** பிரதிவாதி வாதியிடம் கடந்த 08.08.2019 அன்று ரூ. 30,000/- கடனாக பெற்றுக்கொண்டு தாவா கடனுறுதி சீட்டை எழுதிக் கொடுத்ததாகவும், அதற்கான வட்டித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 100/-க்கு 1 என்றும், தாவா கடனுறுதி சீட்டின் தொகையை வாதி பலமுறை பிரதிவாதியிடம் கேட்டும், பிரதிவாதி தராததால் கடந்த 30.09.2021 அன்று பிரதிவாதிக்கு வாதி தரப்பில் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதனை பெற்றுக்கொண்ட பிரதிவாதி கடந்த 08.10.2021 அன்று வாதியிடம் வழக்கு பிராமிசரி நோட்டின் அசல், வட்டித்தொகைக்காக ரூ.1000/- மட்டும் வரவு வைத்து கையெழுத்து செய்துள்ளார் என்றும்,

**(6.2)** அதன்பிறகும் அசல் மற்றும் வட்டித்தொகை ஏதும் தரவில்லை என்றும், மேற்கண்ட சங்கதிகளை சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 118ன் கீழான தொகை, தேதி ஆகியவை தொடர்பான அனுமானம் வாதிக்கு சாதகமாக இருப்பதாலும், அதை பிரதிவாதி தரப்பில் மறுக்கப்படவில்லை என்றும், எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

7. பிரதிவாதி தரப்பு வாதம்

**(7.1) பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** 08.08.2019க்கு முன்போ, பின்போ, வாதியிடம் பிரதிவாதி எவ்வித கடன் தொகையும் பெறவில்லை, தாவா பிராமிசரி நோட்டையும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், தாவா கடனுறுதி சீட்டானது மருவத்தூரை சேர்ந்த சிவபிரகாசம் என்பவரிடம் வாதி



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:06:51 +0530

கூட்டாளியாக இருந்ததால் அவரிடம் கணக்கு முடிக்கப்பட்ட காலாவதியான கடனுறுதி சீட்டை கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பிராமிசரி நோட்டில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ள பேனா மையிற்கும், கையெழுத்து செய்துள்ள பேனா மையிற்கும் வித்தியாசம் உள்ளது என்றும்,

**(7.2)** வா.சா.ஆ.1ல் உள்ள மேற்குறிப்பு பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றும், வாதி தரப்பில் இந்த பிரதிவாதி கடன் வாங்கியதை நிரூபணம் செய்யவில்லை என்றும், எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் மற்றும் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.**

**தீர்வு :-**

**8. எழுவினா –1**

**08.08.2019 தேதியிட்ட தாவா கடனுறுதி சீட்டு உண்மையானது மற்றும் செல்லத்தக்கதா?**

**(8.1)** கடந்த 08.08.2019ல் வாதியிடம் பிரதிவாதி ரூ.30,000/– கடனாக பெற்றுக்கொண்டு தாவா கடனுறுதி சீட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்பதற்கு ஆதாரமாக வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா கடன் தொகைக்கு அசலும் வட்டியும் செலுத்தாத காரணத்தால் கடந்த 30.09.2021ல் வாதி வழக்கறிஞர் சார்பாக பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு ஆதாரமாக அந்த அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(8.2)** அந்த அறிவிப்பை பிரதிவாதி கடந்த 05.10.2021ல் பெற்றுக்கொண்டுள்ளார். அதற்கு ஆதாரமாக வா.சா.ஆ.3 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிறகு கடந்த 08.10.2021ல் ரூ.1000/– கடன்தொகைக்காக கொடுக்கப்பட்டு, பிரதிவாதியால் வா.சா.ஆ.1 ன் பின்புறம் வரவு



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:06:56 +0530

வைக்கப்பட்டுள்ளது. அதில் பிரதிவாதி கையெழுத்து செய்துள்ளார்.

**(8.3)** இதனை மறுத்து கட்சி செய்த பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1ல் வாசகம் எழுதப்பட்டுள்ள பேனா மையிற்கும், கையெழுத்து செய்யப்பட்டுள்ள பேனா மையிற்கும், வித்தியாசம் உள்ளது என்ற கட்சி எடுக்கப்பட்டுள்ளதே தவிர அந்த கையெழுத்து பிரதிவாதியினுடையது அல்ல என்று கட்சி எடுக்கப்படவில்லை.

**(8.4)** மேலும், பிரதிவாதி தரப்பில் மருவத்தூரை சேர்ந்த சிவப்பிரகாசம் என்பவரிடம் வாதி கூட்டாளியாக இருந்ததால் அவரிடம் கணக்கு முடிக்கப்பட்ட காலாவதியான கடனுறுதி சீட்டை கொண்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் பிரதிவாதி தரப்பில் சிவப்பிரகாசம் என்பவரை சாட்சியாக விசாரிக்கவில்லை. மேலும், அவரிடம் கணக்கு முடிக்கப்பட்ட காலாவதியான கடனுறுதி சீட்டு என்பதற்கான எந்த ஆவணங்களையும், கணக்கு முடிக்கப்பட்டதற்கான கணக்கு வழக்குகளையும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை. எனவே, மேற்கண்ட பிரதிவாதியின் வாதமானது நிராகரிக்கப்படுகிறது.

**(8.5) மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம், பிரிவு 118ன் கீழாக,** கடனுறுதி சீட்டின் மறுபயன், கடனுறுதி சீட்டின் தேதி, இவற்றின் அனுமானம் வாதிக்கு ஆதரவாக உள்ளது. வாதி தரப்பில் அதற்காக வா.சா.ஆ.1 தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட அனுமானம் மறுக்கக்கூடிய அனுமானம் தான் என்றாலும், பிரதிவாதி தரப்பில் மேற்கண்ட அனுமானத்தை மறுக்கக்கூடிய வகையில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தவில்லை.

**(8.6)** எனவே, மேற்கண்ட சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, 08.08.2019 தேதியிட்ட தாவா கடனுறுதி சீட்டு உண்மையானது மற்றும் செல்லத்தக்கது என்று எழுவினா –1 க்கு இந்நீதிமன்றம் விடை



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:07:01 +0530

காண்கிறது.

**<u>9. எழுவினா –2</u>**

**வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?**

எழுவினா எண்.1ல் தாவா கடனுறுதி சீட்டு உண்மையானது மற்றும் செல்லத்தக்கது என தீர்வு கண்டிருப்பதாலும், வாதியிடம் பிரதிவாதி கடந்த 08.08.2019 அன்று ரூ.30,000/– கடன் பெற்று கொண்டு, தாவா கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்துள்ளதும், பிறகு தாவா கடனுறுதி சீட்டில் 08.10.2021 அன்று ரூ.1000/– மட்டும் வரவு வைத்து, கையெழுத்து செய்துள்ளதும், வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் மூலமாக நிருபணம் செய்யப்பட்டுள்ளதாலும், வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா –2 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**<u>10. எழுவினா –3</u>**

**தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன ?**

எழுவினா எண் 1, 2 வாதிக்கு ஆதரவாக விடை கண்டிருப்பதால் தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் ஏதும் இல்லை என்று என எழுவினா –3 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**முடிவில்,** இவ்வழக்கானது செலவுத்தொகையுடன் தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டு, தாவா தொகையான ரூ.40,140/–ஐ பிரதிவாதி, வாதிக்கு திருப்பிச் செலுத்த வேண்டுமென்றும், தாவா அசல் தொகை ரூ.30,000/–க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதிவரை ஆண்டுக்கு 12% வட்டியும், பின்னிட்டு தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தும் தேதிவரையில் ஆண்டுக்கு 6% பின்வட்டி சேர்த்து வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர்



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:07:06 +0530

கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 09–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:07:12 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>பின் இணைப்பு</u>**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 திரு. விஜயகுமார்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 08.08.2021 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு அசல் |
| வா.சா.ஆ.2 | 30.09.2021 | வாதியின் வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 05.10.2021 | மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>** –இல்லை–

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** –இல்லை–

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:07:18 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,</u>**
**<u>சீர்காழி.</u>**

**<u>நேரிய/வரைவு தீர்ப்புரை</u>**
அசல் வழக்கு எண்.190/2022
நாள்.09.03.2026._